# பொருளடக்கம்

முகவுரை……………………………………………………………………………………..…….....…...............46

நிறைவேற்று அறிக்கை………………………………………………………………………..……………….47

அறிமுகம்………………………………………………………………………………………………….…......48

முதியோர்களுக்கான தேசிய செயலகம்……………………………………………........……………..49

தொலைநோக்கு…………………………………………………………………………………..…………......49

பணிக்கூற்று…………………………………………………………………………………………………........49

நிறுவன கட்டமைப்பு……………………………………………………………………..……………...........50

முதியோர்களுக்கான தேசிய சபை – 2015 ……………………………...............….…..........................51

முதியோர்களுக்கான தேசிய சபையின் தவிசாளரின் அறிக்கை – 2015 …………………...................................52

முதியோர்களுக்கான தேசிய சபையின் பணிப்பாளரின் அறிக்கை – 2015...................................................53

2015 ஆம் ஆண்டு செயற்திறன் அறிக்கை………………………….............…......…..................55

முதியோர் இல்லங்களைப் பழுதுபார்த்தல் தொடர்பில் உதவி வழங்குதல் ……………........………………55

முதியோர் இல்லங்களுக்கு உபகரணம் தொடர்பில் உதவி வழங்குதல்…………………………………56

நடமாடும் சேவைகள் மூலம் முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்ட விபரம் 2015…………......57

கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல் மற்றும் நிதியுதவி வழங்கல் ரூ.5,000-2015..........................58

பிரதேச மட்ட முதியோர் சங்கங்களுக்கு ரூ.7,500/- நிதியுதவி வழங்கல் - 2015.........................................59

மாவட்ட மட்ட முதியோர் சங்கங்களுக்கஜ ரூபா. 15000 நிதியுதவி வழங்குதல்-2015................................59

மாகாண மட்ட முதியோர் சங்கங்களுக்கஜ ரூபா. 25,000 நிதியுதவி வழங்குதல-2015……………………59

வீட்டிலுள்ள முதியோர்களைப் பராமரித்தற் சேவை – பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித் திட்டம்……………......60

முதியோர் தாபரிப்பு நிகழ்ச்சித் திட்டம்..................................................................................................61

கதிர்காம யாத்திரை விடுதியின் வருமானம் மற்றும் செலவுத் தகவல்கள் - 2015......................................64

சிரேஷ்ட பிரஜைகளுக்காகன ஓய்வூதியத் திட்டம்………………………………………………….........65

முதியோர் பராமரிப்பு சபை………………………………………………………………………..…...........66

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்குக் கொள்கை……………………………….............68

2015 மார்கழி 31 திகதிய நிதி நிலவரக் கூற்று………………………………………………………..........69
2015 வருமானம் மற்றும் செலவின அறிக்கை………………………………………………….………..70

2015 நிதிப் பாய்ச்சல் கூற்று………………………………………………………..............……..........…......71

மேலதிகப் பட்டியல்………………………………………………………………………………….……........72

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்து……………………………………………………….........75

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ..........................................................................76

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பில் விடைகள் ............................................87

# முகவுரை

2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாத்தல் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சமூக சேவைகள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்டுள்ள முதியோர்களுக்கான தேசிய செயலகம், இலங்கை முதியோர் சமுதாயத்தின் மேம்பாட்டுக்காக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள், கொள்கைசார் தீர்மானங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டின் இலங்கையிலுள்ள முதியோர் சமுதாயத்தின் நலன்புரியினை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு அமுற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்பாட்டு அறிக்கையினை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்வைப்பது, 2015 ஆம் வருடத்தின் இவ்வாண்டு அறிக்கையின் நோக்காகும்.

சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின்போது முதியோரின் சுய கௌரவம், சுதந்திரம், பங்களிப்பு. பாதுகாப்புக்காகப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், மிகவும் விளைதிறனான சேவையொன்றை நிறைவேற்றுவதற்கு முடிந்துள்ளமை எமக்குக் கிடைத்த அதிஸ்டமாக உள்ளது.

மேலும் தற்போதைய அரசின் 100 நாள் நிகழ்ச்சித் திட்டம், அமைக்கப்பட்ட புதிய அரசின் கீழ், கடந்த சந்ததியினரின் பங்குதாரர்களான முதியோர்களுக்கிடையே 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு ரூபா. இரண்டாயிரம் கொடுப்பனவினை வழங்கும் பொருட்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

# நிறைவேற்று அறிக்கை

2015 ஆம் ஆண்டில் முதியோருக்கான தேசிய செயலகம், இந்நாட்டின் முதியோர் சமூகத்தின் சேமநலத்திற்காக இலங்கை பூராவும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இதனால் 2015 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டவாறு வெற்றிகரமாக பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றமொன்றை சுவீகரித்துக் கொள்ள முடிந்துள்ளது.

தற்போதைய அரசின் தேசிய அரசாங்கக் கொள்கையின் கீழ், 70 வயதினைப் பூர்த்தி செய்துள்ள மூத்த பிரஜைகளுக்கு ரூபா. இரண்டாயிரம் வாழ்வாதார உதவியினை வழங்குதல் பிரதானமானது என்பதுடன், நடைமுறையிலுள்ள சவால்களை வெற்றிகொள்ளுவதற்கு சமூக சேவைகள் நலனோம்புகை மற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சின் கீழும் மற்றும் சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் கீழும் கௌரவ அமைச்சர்கள் மற்றும் கௌரவ பிரதியமைச்சர்களின் வழிகாட்டல் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர் குழாம் இது தொடர்பில் காட்டிய ஆர்வத்தினை மிகவும் பாராட்டுதல் வேண்டும்.

அதே போல சமூக சேவைகள் நலனோம்புகை மற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சின் கீழ் செயலாளரினை உள்ளடக்கிய அலுவலகக் குழாமுக்கும், சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சின் செயலாளரினை உள்ளடக்கிய அலுலவகக் குழாமுக்கும், முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் அலுவலகக் குழாமுக்கும், பிரதேச செயலகப் பிரிவுகளில் விடயம் தொடர்பில் கடமையினைப் பதிலீடு செய்யும் உத்தியோகத்தர்களுக்கும் விசேட நன்றிகள் உரித்தாகும்.

# அறிமுகம்

கடந்த பல தசாப்பதங்களாக நாட்டில் காணப்படும் தொடர்ந்து இடம் பெறும் சமூக, பொருளாதார அபிவிருத்திகளின் விளைவாக சுகாதார, ஊட்டச்சத்து, கல்வி ஆகிய துறைகளில் தென்படும் மேம்பாடுகளைக் காணக்கூடியதாகவிருக்கின்றது. மேற்குறிப்பிட்ட காரணிகளின் விளைவாக பிறப்பு இறப்பு விகிதத்தில் வீழ்ச்சி, எதிர்பார்க்கும் ஆயுட்காலம், முதியோர் சனத்தொகையின் அதிகரிப்பு ஆகியன காணப்படுகின்றன. இலங்கையில் முதியோர் சனத்தொகையில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் பிரகாரம், அடுத்த தசாப்தத்தில் நாட்டின் முதியோர் சனத்தொகையின் தற்போதைய விகிதமாகிய 12.2மூ லிருந்து 22மூ மாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

முதியோரின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கான சேமநல வசதிகளை தரமுயர்த்தல் அவசியமாகும். முதியோரின் உரிமைகளும் கூட பாதுகாக்கப்படல் வேண்டும். இதனை அடைவதற்காக முதியோருக்கான தேசிய செயலகம் உயர் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றது. முதியோர் சமூகத்தை சக்தியூட்ட 2015 ஆம் வருடத்தில் பல்வேறு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. கிராமிய முதியோர் குழுக்கள், மாகாண முதியோர் சபைகள், மாவட்ட முதியோர் சபைகள் ஆகியவற்றைப் பதிவு செய்தல், நாட் காப்பக நிலையங்களுக்கு நிதியுதவியளித்தல், மனோநிலை மற்றும் ஆன்மீக விருத்திகளை மேம்படுத்த உளவியல் ஆற்றுப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், முதியோர் காப்பாளர்களைப் பயிற்றுவித்தல் என்பன எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதான நடவடிக்கைகளில் சிலவாகும்.

அதனூடாக முதியோர் தனிமையான வாழ்க்கையை நடத்துவதைத் தடுப்பதும், சமூகத்தில் அவர்களின் பங்குபற்றலை மேம்படுத்தலும் எமது முக்கிய நோக்கமாகும்.

## முதியோர்களுக்கான தேசிய செயலகம்

2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ
முதியோர்களுக்கான தேசிய செயலகமும், முதியோர்களுக்கான தேசிய சபையும் நிறுவப்பட்டுள்ளன.


### *தொலைநோக்கு*

**“**இலங்கை மக்களை வினைத்திறன் மிக்கதும் சக்தி வாய்ந்ததுமான வயோதிபமடைதலை நோக்கிக் கொண்டு செல்லுதல்**”**

### *பணிக்கூற்று*

‘‘முதியோர்களின் சுதந்திரம், பாதுகாப்பு, ஆத்ம திருப்தி, பங்களிப்பு, கௌரவத்தினை உறுதிப்படுத்துதல், சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளில்
முதியோர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை புரிய வைத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களினூடாக முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது எமது பணியாகும்’’

# நிறுவன கட்டமைப்பு


முதியோர்களுக்கான தேசிய சபை
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
பணிப்பாளர் (1)
உதவிப் பணிப்பாளர் (அபிவிருத்தி) (1)
உதவிப் பணிப்பாளர் நிர்வாகம் (1)
சட்ட ஆலோசகர் (1)
கணக்காளர் (1)
நிர்வாக உத்தியோகத்தர் (1)
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் - 98
முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர் - 2
முகாமைத்துவ உதவியாளர்கள் (1)
முகாமைத்துவ உதவியாளர்கள் (2)
முகாமைத்துவ உதவியாளர்கள் (1)
முகாமைத்துவ உதவியாளர்கள் (2)
சாரதி (2)
அலுவலக உதவியாளர்(1)
அலுவலக உதவியாளர் (1)
அலுவலக உதவியாளர் (1)

# முதியோர்களுக்கான தேசிய சபை – 2015

**தலைவர்**

உப தலைவர் | சபை உறுப்பினர்கள் | செயலாளர்

| பெயர் | பதவி |
|---|---|
| 1. திரு. மகிந்த செனெவிரத்ன | தலைவர் |
| 2. திரு. சமன் உடவத்த | உப தலைவர் |
| 3. திரு. சுவிந்த எஸ். சிங்கப்புலி | செயலாளர் |
| 4. திரு. பிரதீப் யசரத்ன | சபை உறுப்பினர் |
| 5. வணக்கத்திற்குரிய கிராம்பே ஆனந்த அனுனாயக்க தேரர் | சபை உறுப்பினர் |
| 6. திரு. சோமபால லியனகே | சபை உறுப்பினர் |
| 7. சட்டத்தரணி திரு. டி. மகிந்த கித்சிறி த சில்வா | சபை உறுப்பினர் |
| 8. மருத்துவர் ஆனந்த ஜயலால் | சபை உறுப்பினர் |
| 9. சட்டத்தரணி திரு. ஏ.ஏ. ஜயந்த ஜயசிறி | சபை உறுப்பினர் |
| 10. சிரேஸ்ட விரிவுரையாளர் திரு. சுதீர ஜயவீர | சபை உறுப்பினர் |
| 11. உயர் சட்டத்தரணி திரு. பீ.டீ. மகிலால் சந்திம | சபை உறுப்பினர் |
| 12. கலாநிதி திரு. றிட்லி ஜயசிங்க | சபை உறுப்பினர் |
| 13. திரு. கே.எம்.எஸ்.ஜீ. பண்டார | சபை உறுப்பினர் |
| 14. திருமதி. முலர் கங்காதரன் | சபை உறுப்பினர் |
| 15. சட்டத்தரணி கமல் அமரசிங்க | சபை உறுப்பினர் |
| 16. கலாநிதி திருமதி. லீலா பியசீலி குணசேகர | சபை உறுப்பினர் |

# முதியோர்களுக்கான தேசிய சபையின் தலைவரின் அறிக்கை - 2015

இலங்கை தற்பொழுது முகம் கொடுக்கும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளிடையே, முதியோர் சனத்தொகையின் துரித வளர்ச்சி பிரதான பிரச்சினைகளில் ஒன்றாகும். ஆகவே முதியோருக்கான தேசிய சபையின் மீது ஒப்படைக்கப்பட்டுள்ள சமூகப் பொறுப்பு நளாந்தம் வளர்ந்து வருகின்றது என்பது கண்கூடாகத் தெரிகின்றது. இது முதியோரின் சேமநலத்திற்கும், பாதுகாப்பையும் அளிக்கும் பொருட்டு திட்டமிட்டு இலக்குகளை நடைமுறைப்படுத்துவதை அதிக கவனம் செலுத்துவதை இச் சபைக்கு மிகவும் முக்கியமான பணியாக ஆக்கியுள்ளது.

அதன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட பணிகளை அடைவதற்காக எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தியன் ஊடாக சென்ற காலங்களுடன் ஒப்பிடும் போது, இச் சபை பரந்த தேசிய சேவையை ஆற்ற முடிந்துள்ளது. இது எமக்கு பூரண திருப்தியை அளித்துள்ளது.

ஆகவே பாரிய பொறுப்புடன் அளப்பரிய சேவையை வழங்கிய முதியோருக்கான தேசிய சபையைச் சேர்ந்த சகல உறுப்பினர்களுக்கும், முதியோருக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளரும், பணியாளர்களுக்கும், முதியோர் பராமரிப்பு சபைக்கும் எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் முதியோரின் சேமநலத்தையும், பாதுகாப்பையும் மேம்படுத்த எங்களுக்கு பல்வேறு வழிகளில் உதவிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் எனது விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

**மகிந்த செனெவிரத்ன,**
செயலாளர்
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு,
தலைவர்,
முதியோர்களுக்கான தேசிய சபை

# முதியோர்களுக்கான தேசிய செயலக பணிப்பாளரின் அறிக்கை - 2015

முதியோர்களுக்கான தேசிய சபையின் கொள்கை ரீதியான தீர்மானங்கள் மற்றும் நிச்சயிக்கப்பட்ட வழிமுறையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதியோர்களுக்கான செயலகத்தின் மூலம் நடப்பு ஆண்டில் அடைந்துள்ள செயலாற்றல் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**1. ரூபா 2000 மூத்த பிரஜைகளுக்கான கொடுப்பனவு**

70 வயதினைப் பூர்த்தி செய்த மூத்த பிரஜைகளின் பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை வழங்குவதை நோக்காகக் கொண்டு 2015 பாதீட்டுப் பிரேரணையின் கீழ் முதியோர் நலன்புரி தொடர்பில் மேலதிக ஏற்பாடு அரசினால் ஒதுக்கப்பட்டடுள்ளது.

70 வயதினைத் தாண்டிய குறைந்த வருமானத்தினைக் கொண்ட 386080 மூத்த பிரஜைகளுக்கு 2015 ஆம் ஆண்டில் ரூபா. 2000.00 கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

**2. கிராமிய முதியோர் சங்கங்களை நிறுவுதல் மற்றும் நிதியுதவி வழங்கல்**

640 கிராமிய முதியோர் சங்கங்கள், 06 பிரதேச முதியோர் சங்கங்கள், 02 மாவட்ட முதியோர் அமைப்புக்கள் மற்றும் 03 மாகாண முதியோர் அமைப்புக்களுக்குமென ரூபா 3.510 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**3. முதியோர்களுக்கு அடையாள அட்டை வழங்கல்**

வருடத்தினுள் ரூபா 0.815 மில்லியன் செலவில் முதியோர்கள் 10642 பேர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

**4. முதியோர்களின் வருமானம் பெருகுவதற்கான செயற்பாடுகளுக்கு நிதி வழங்குதல்.**

120 சுய தொழில் உதவிகளுக்காக சுமார் ரூப. 1.9991 மில்லியன் 2015க்குள் நிதி வழங்கப்பட்டுள்ளது.

**5. பயிற்சயளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்.**

கிராமிய மட்டத்தில 331 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திடடங்களும், பிரதேச மட்டத்தில் 331 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திடடங்களும் மற்றும் மாகாண மட்டத்தில் 25 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் மற்றும் 02 ஆலோசனைசார் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களும் என ரூபா. 9.989 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

**6. இலவசமாகக் கண்வில்லை மற்றும் செவிப்புல உபகரனங்கள் வழங்குதல்**2015 ஆம் ஆண்டில் 4873 முதியோர்களுக்கு வைத்திய சிபாரிசின் பிரகாரம் கண்வில்லை

வழங்கப்பட்டுள்ளதுடன் 323 பேர்களுக்கு செவிப்புல உபகரனங்கள் வழங்கப்பட்டுள்ளன. செலவு செய்யப்பட்ட பணம் ரூபா 13.085 மில்லியனாகும்.

**7. சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம்**

“நிம்மதியான உலகொன்று, குதூகலத்துடன் முதுமையினைக் கழித்தல்” எனும் தொனிப்பொருளில் 2015 ஆம் ஆண்டு முதியோர் தினக்கொண்டாட்ட விழா, 2015.10.01 ஆம் திகதி கௌரவ அமைச்சரின் தலைமையிலும் மற்றும் நாட்டின் பல திசைகளிலிருந்தும் வந்த முதியோர்களின் பங்களிப்படனும் நடாத்தப்பட்டதுடன் அதற்காக ரூபா 10.270 மில்லியன் செலவு செய்யப்பட்டது.

**8. முதியோர் இல்லங்களுக்கு நிதியுதவி வழங்குதல்**

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கீழ் நிர்வாக குழுவினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற கதிர்காம முதியோர் இல்லம் மற்றும் சுற்றுலா விடுதி மற்றும் மாலிகாதன்ன எச்ஜின் நோனா ஞாபகார்த்த முதியோர் இல்லத்தினை உள்ளடக்கி 18 முதியோர் இல்லங்களை மேம்படுத்துவதற்கு ரூபா 19.221 மில்லியன் நிதி செலவு செய்யப்பட்டுள்ளது.

**9. முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித்திட்டம்**

தனவந்தர்களின் நன்கொடையினூடாக 2015 ஆம் ஆண்டு ஒருவருக்கு மாதாந்தம் ஒன்றுக்காக ரூபா 250 வீதம் 51 முதியோர்களுக்கு தொடர்ச்சியாக நிதியுதவி வழங்க முடிந்துள்ளது.

**10. முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை**

வருடத்தினுள் சபைக் கூட்டங்கள் 45 நடாத்தப்பட்டுள்ளதடன் முதியோர்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் 107 களுள் 67 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பராமரிப்புச் சபையின் நடவடிக்கைகளுக்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 0.929 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

**11. முதியோர்களுக்கான தேசிய சபை**

2015 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான தேசிய சபைக் கூட்டங்கள் 07 நடாத்தப்பட்டுள்ளது. செலவு ரூபா 0.384 மில்லியானகும்.

2015 ஆம் ஆண்டிற்காக மூலதனச் செலவின் கீழ் ரூபா. 25 மில்லியனும் மற்றும் மீண்டுவரும் செலவின் கீழ் ரூபா 120 மில்லியன் நித் ஒதக்கப்பட்டுள்ள போதிலும் கட்டுநிதியாக முறையே ரூபா 24.6 மில்லியன் மற்றும் ரூபா. 119.4 மில்லியனே கிடைக்கப் பெற்றிருந்தது. ஆகையினால் 2015 ஆம் ஆண்டு தொடர்பில் மீண்டுவரும் செலவின் கீழ் ரூபா. 74.3 மில்லியன் நிதியும் மற்றும் மூலதனச் செலவின் கீழ் ரூபா. 17.7 மில்லியன் நிதியும் முதியோர் நலன்புரிச் செயற்பாடுகளுக்கு நேரடியாகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

**சுவிந்த எஸ். சிங்கப்புலி,**
பணிப்பாளர்
முதியோர்களுக்கான தேசிய செயலகம்

# 2015 ஆம் ஆண்டின் அபிவிருத்தி செயற்திறன்.

## முதியோர் இல்லங்களைப் புதுப்பித்தலுக்காக நிதியுதவி வழங்கல்

| மாகாணம் | முதியோர் இல்லம் | கொடுப்பனவு செய்யப்பட்ட நிதி (ரூபா) |
|---|---|---|
| ஹம்பாந்தோட்டை | தங்கல்ல யாயவத்த முதியோர் இல்லம் | 2,750,000.00 |
| மொனராகல | கதிர்காமம் அரச முதியோர் இல்லம் | 165,405.52 |
| கம்பகா | மாலிகாதன்ன அரச முதியோர் இல்லம் | 1,761,169.17 |
| குருனாகல் | வவுலாவ வவித்தேரகம முதியோர் இல்லம் | 1,000,000.00 |
| | பொல்காவல நககொட்டாமட பகல்நேர நிலையம் | 241,070.73 |
| | பொல்காவல கொதல்ல முதியோர் நிலையம் | 100,204.52 |
| புத்தளம் | நாத்தாண்டியா மூத்த பிரஜைகளுக்கான அமைப்பு | 500,000.00 |
| காலி | அல்பிட்டிய சமாதி முதியோர் அமைப்பு | 500,000.00 |
| அம்பாறை | சரண முதியோர் இல்லம் | 566,341.12 |
| மட்டக்களப்பு | சுவாமி விபுலானந்த முதியோர் இல்லம் | 500,000.00 |
| மாத்தறை | ரபத்தர தரங்கல முதியோர் இல்லம் | 1,190,758.49 |
| அனுராதபுரம் | சாலியபுர அரச முதியோர் இல்லம் | 2,065,255.93 |
| **மொத்தம்** | | **10,941,728.01** |

## முதியோர் இல்லங்களுக்கு உபகரணங்கள் தொடர்பில் உதவி வழங்குதல்.

| மாவட்டம் | முதியோர் இல்லம் | வழங்கப்பட்ட நிதி (ரூபா) |
|---|---|---|
| கொழும்பு | கொரண மைத்ரி முதியோர் இல்லம் | 46,400.00 |
| கண்டி | கொட்டகேன முதியோர் இல்லம் | 278,428.00 |
| கம்பகா | மீரிகம செத்செவண அரச முதியோர் இல்லம் | 759,940.00 |
| இரத்தினபுரி | களவான ஞானோதய மன்றம் | 454,448.00 |
| அம்பாறை | தெகிஅத்த கண்டிய சரண முதியோர் இல்லம் | 402,099.00 |
| அம்பாறை | சரண முதியோர் இல்லம் | 566,341.12 |
| திருகோணமலை | | 1,300,000.00 |
| மாத்தறை | கிரிந்தபுகுல்வல்ல கருணாரத்ன செத்செவண முதியோர் இல்லம் | 1,061,405.00 |
| ஹம்பாந்தோட்டை | கட்டுவன லியனபத்திரண முதியோர் இல்லம் | 112,500.00 |
| அனுராதபுரம் | சாலியபுர அரச முதியோர் இல்லம் | 2,425,35.00 |
| **மொத்தம்** | | **6,840,570.00** |

# முதியோர் அடையாள அட்டைகளை வழங்குதல் - 2015

| மாகாணம் | மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|---|
| மேல் மாகாணம் | களுத்துறை | 5933 |
| | கொழும்பு | 7542 |
| | கம்பகா | 10119 |
| மத்திய மாகாணம் | மாத்தளை | 2963 |
| | நுவரெலியா | 3604 |
| | கண்டி | 8670 |
| தென் மாகாணம் | ஹம்பாந்தோட்டை | 4257 |
| | காலி | 7347 |
| | மாத்தறை | 5802 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 2121 |
| | அம்பாறை | 4149 |
| | திருகோணமலை | 1718 |
| வடமேல் மாகாணம் | குருனாகல் | 10161 |
| | புத்தளம் | 4906 |
| வட மத்திய மாகாணம் | அனுராதபுரம் | 5494 |
| | பொலன்னறுவை | 2922 |
| ஊவா மாகாணம் | பதுளை | 3565 |
| | மொனராகல | 1905 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 8126 |
| | கேகாலை | 4570 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 2335 |
| | மன்னார் | 840 |
| | முல்லைத்தீவு | 681 |
| | கிளிநொச்சி | 628 |
| | வவுனியா | 408 |
| **மொத்தம்** | | **110766** |

## கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல் மற்றும் நிதியுதவி வழங்கல் ரூ.5,000- 2015

| மாகாணம் | மாவட்டம் | ரூ 5000 உதவி பெற்ற சங்கங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மேல் | களுத்துறை | 16 |
| | கொழும்பு | 12 |
| | கம்பஹா | 89 |
| மத்திய | கண்டி | 35 |
| | மாத்தளை | 14 |
| | நுவரெலியா | 07 |
| தெற்கு | காலி | 26 |
| | மாத்தறை | 57 |
| | அம்பாந்தோட்டை | 35 |
| வடக்கு | யாழ்ப்பாணம் | 12 |
| | வவுனியா | 14 |
| | கிளிநொச்சி | 01 |
| | மன்னார் | 01 |
| | முல்லைத்தீவு | 04 |
| கிழக்கு | மட்டக்களப்பு | 43 |
| | அம்பாறை | 31 |
| | திருகோணமலை | 14 |
| வடமேல் | புத்தளம் | 11 |
| | குருநாகல் | 70 |
| சப்ரகமுவ | இரத்னபுரி | 32 |
| | கேகாலை | 28 |
| ஊவா | மொனராகலை | 13 |
| | பதுளை | 24 |
| வட மத்திய | அனுராதபுரம் | 50 |
| | பொலன்னறுவை | 01 |
| **மொத்தம்** | | **640** |

## பிரதேச மட்ட முதியோர் சங்கங்களுக்கு ரூ.7,500/- நிதியுதவி வழங்கல் - 2015

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 01 |
| தென் மாகாணம் | காலி | 01 |
| ஊவா மாகாணம் | பதுளை | 01 |
| வடமேல் மாகாணம் | புத்தளம் | 01 |
| கீழ் மாகாணம் | மட்டக்களப்பு | 01 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 01 |
| மொத்தம் | | 06 |

## ரூபா. 15000 நிதியுதவி வழங்கப்பட்ட மாட்ட முதியோர் அமைப்புக்கள் - 2015

| மாகாணம் | மாவட்டம் | அமைப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வடமேல் மாகாணம் | புத்தளம் | 01 |
| வட மத்திய மாகாணம் | பொலன்னறுவை | 02 |
| மொத்தம் | | 02 |

## ரூபா. 25000 நிதியுதவி வழங்கப்பட்ட மாகாண மட்ட முதியோர் அமைப்புக்கள் - 2015

| மாகாணம் | அமைப்புக்களின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் மாகாணம் | 01 |
| வட மத்திய மாகாணம் | 01 |
| தென் மாகாணம் | 01 |
| மொத்தம் | 03 |

# முதியோருக்கான குடும்ப உறைவிட நலனோம்பல் சேவை - பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

முதியோர்களுக்கு தேவைப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் தாதி நலச்சேவை வழங்கும் நோக்கில் முதியோர்களைப் பாதுகாக்கும் தொண்டர் ஊழியர்களுக்கு பயிற்சியளித்து, சேவையில் ஈடுபடுத்தும் நிகழ்ச்சித்திட்ம் ஒன்று முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட 135 பேர்களுக்கு முதியோர்களை பாதுகாத்து கவனித்துக்கொள்ளும் மற்றும் அவர்களின் சுகாதார ரீதியான சேவைகள் வழங்கல் தொடர்பான மூன்று வாரங்களைக் கொண்ட முறையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இது வரையில் குறிப்பாக மேல் மாகாணத்தினுள் வாழுகின்ற தேவையுடைய முதியோர்களுக்கு அவர்களின் சேவையை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு பகல் நேரத்தில் 08 மணித்தியாலங்களைக் கொண்ட காலப்பகுதிக்காக தலா ரூபா 750.00 வீதமும், இரவில் பணியாற்றுபவருக்கு ரூபா. 900.00 வீதமும் மற்றும் 24 மணி நேரம் பூராவும் பணியாற்றுபவருக்கு ரூபா. 1650.00 வீதமும் கட்டணமமாக அறவிடப்படுகிறது.

முதியோருக்கான தேசிய செயலகத்தின் முழுமையான மேற்பார்வையின் கீழ் சேவை வழங்கப்படுவதுடன் சேவை பெற்றுக்கொள்பவரின் தேவைக்கமைய ஆண் பெண் என பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறே சேவையில் ஈடுபடும் சகல நலச் சேவைகளும் மரியாதையாகவும் ஒழுக்கமாகவும் வழங்கப்படும்.

சமூக சேவைகள் அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு ஒன்றிணைந்து பயிற்சிகளை திட்டமிட்டு செயற்படுத்துவதுடன் பயிற்சிகளை திறம்பட பூர்த்திசெய்கின்றவர்களுக்கு முறையான சான்றிதழும் அடையாள அட்டையும் வழங்கப்படுகிறது. ஆகையினால் மிகவும் நம்பிக்கையுடன் அந்த பாதுகாப்பு நலச் சேவைகளை அந்த தொண்டர் ஊழியர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

இந்த செயற்றிட்டம் முதியோர்களுக்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் மட்டுமல்ல ஏனையவர்களுக்கும் அரச அங்கீகாரமுடைய பயிற்சிகளின் பின்னர் பெருமதியான சான்றிதழ் பெறமுடியும். அவ்வாறு பெற்று தொண்டர் ஊழியராக சேவை புரிந்து வருமானமும் பெற்றுக்கொள்ள முடியும்.

தற்சமயம் மேல் மாகாணத்தை மையப்படுத்திக ்கொண்டுள்ள இந்த முதியோர் கவனிப்பு தொண்டர் சேவை எதிர்காலத்தில் ஏனைய மாகாணங்களுக்கும் விரிவுபடுத்தி பரந்தளவில் சேவை வழங்க எதிர்பார்க்கின்றோம்.

# முதியோர் தாபரிப்புத் திட்டம்

முதியோர்களுக்கான தேசிய சபையின் பிரேரணையின் பிரகாரம் மிகவும் உதவியற்ற வறிய நிலையிலுள்ள 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு உதவும் நோக்கில் இந்த முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித்திட்டம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு எந்தவொரு நபருக்கும் பணம் நன்கொடையாக வழங்க முடியும் என்பதுடன் அவ்வாறு நன்கொடையாளர் மூலம் வழங்கப்படுகின்ற பணம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும் மிகவும் வறிய உதவியற்ற முதியோர்களுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 250 வீதம் வழங்கப்படுகிறது. பயனாளிகளுக்குப் பணம் வழங்கப்படும் போது 04 மாதங்களுக்கு ஒரு முறை ஒரு பயனாளிக்குரூபா 1000 வீதம் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் வழங்கப்படுகிறது. பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பயனாளியிடம் பணம் ஒப்படைக்கப்படும்.

பிரதேச செயலாளர் அலுவலகத்திலுள்ள எமது உத்தியோகத்தர் (முதியோர்களின் உரிமையை மேம்படுத்தும் உதவி உத்தியோகத்தர்.ஃசமூக சேவை உத்தியோகத்தர்) ஒவ்வவொரு மூன்று மாதங்களுக்கும் ஒரு முறை பயனாளிகள் பற்றிய தகவல்கள் ஆராயப்படுவதுடன் பயனாளிகளுக்குப் பணம் வழங்கும் போது பணம் வழங்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நன்கொடையாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

அவ்வாறு இந்த நிகழ்சித்திட்டத்தின் கீழ் உதவி வழங்கும் போது விருப்பமான ஒருவரை அல்லது சிலரை அல்லது தாம் விரும்பும் பிரதேசத்திலுள்ள ஒருவரை அல்லது சிலரை நன்கொடையாளர்களினால் தேர்ந்தெடுக்க முடியும். அவ்வாறு இல்லையென்றால்அந்த தேர்வு இந்த அலுவலகத்தின் மூலம் செய்யப்படுவதுடன் பயனாளியின் பெயர், விலாசம், உள்ளடங்கும் தகவல்கள் நன்கொடையாளருக்கு வழங்குவதற்கு எமது அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்களிப்பு வழங்க விரும்பும் நபருக்கு பத்தரமுல்லை, இலங்கை வங்கிக் கிளையில் இல. 5234881 ஐ கொண்ட முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சித்திட்டக் கணக்கிற்கு உங்கள் நன்கொடைகளை வைப்பிலிட முடியும் என்பதுடன் அவ்வாறு வைப்பிலிடும் பொழுது பணம் வைப்பிலிட்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை எமக்கு வழங்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் எமது அலுவலகத்திற்கு நேரில் வந்து உங்களின் பணத்தை வழங்க முடியும்.

இந்த நிகழ்ச்சித் திட்டம் உதவியற்ற முதியோர்களுக்காக செய்யப்படும் மிகப்பெரும் தர்மமாகும். ஆகையினால் அதை மெம்மேலும் விரிவுபடுத்தி முதியோர்கள் பலருக்கு இந்த நிகழ்ச்சியின் மூலம் சேவைகளை வழங்க எதிர்பார்க்கின்றோம்.

அதன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டின்போது முதியோர்களை காக்கும் அர்ப்பணிப்பாளர் நிகழ்ச்சியின் நன்கொடையாளர்கள்,பயனாளிகள் மற்றும் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகள் கீழே தரப்பட்டுள்ளது.

| இல | பங்களிப்பாளரின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | பயனாளிகளின் பெயர் | பிரதேச செயலகம் |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. அனுசா கோகுள பிரனாந்து | 07 | திருமதி. ஏ.கேமமாலா பெரேரா | மகரகம |
| | | | திரு. எம்.ஏ. பீற்றர் பெரேரா | மகரகம |
| | | | திரு. டபிள்யு.டி. தர்மதாஸ | மகரகம |
| | | | ஜீ. தெரேசா திலக் | களனிய |
| | | | திரு. எச்.என். பிரனாந்து | பானந்துறை |
| | | | ஜே.ஏ. வினிபிரதா பெரேரா | களுத்துறை |
| | | | திரு. ஏ.ஜீ. தர்மவர்தன | தரணியகல |
| 2. | செல்வி. பீ.கே.எஸ். சுபோதினி | 1 | திருமதி. எம்.பீ. லிலி | களனி |
| 3. | திரு. எச்.பி. தமித்தேகம | 08 | திருமதி. ஆர்.ஏ. கரளியன்னோனா | மிகந்தலை |
| | | | திருமதி. டபிள்யு.பீ. லீலாவதி | திஸ்ஸமகாராமய |
| | | | எச்.எம். கேரத் மெனிக்கே | இப்பாகமுவ |
| | | | திருமதி. டீ.எம். டிங்கிரி அம்மா | மாஸ்பொத்த |
| | | | திருமதி. டபிள்யு.ஜீ. குணவதி | குண்டகசாலை |
| | | | திருமதி. பீ.டீ. ஜென்னோனா | றிதிகம |
| | | | திருமதி. ஆர்.பீ.டீ. உக்கு | படுவஸ்நுவர |
| | | | திருமதி. ரீ.டபிள்யு.ஜீ. அங்கோ | மாவனெல்ல |
| 04. | திருமதி. எஸ்.ஏ. கிங்ரட் | 08 | திருமதி. பீ.ஆர். சாதினோனா | வரக்காப்பொல |
| | | | திருமதி. ஐ.ஜீ. சொய்தா | வரக்காப்பொல |
| | | | திருமதி. எம்.பி. பொடினோனா | வரக்காப்பொல |
| | | | திருமதி.ஜெ.பீ. லாய்சா | வரக்காப்பொல |
| | | | யசவதி வெத்தசிங்க | மகரகம |
| | | | திருமதி. கே.பீ. அசலின்னோனா | மகரகம |
| | | | திரு. ஏ. சிமியோன் | மீகமுவ |
| | | | திரு. ஏ. அமரசிறி த சில்வா | மீகமுவ |
| | | | திரு. எம்.எம். அபேரத்ன | தம்புத்தேகம |
| | | | திருமதி. ஜீ.ஆர். சாதினோனா | வரக்காப்பொல |
| | | | திரு. ஐ.ஜீ. சொய்தா | வரக்காப்பொல |
| | | | திருமதி. எம்.பீ. பொடிநோனா | வரக்காப்பொல |
| | | | திருமதி. டபிள்யு.எச். லிலியா | வரக்காப்பொல |
| | | | திருமதி. பீ. லய்சா | வரக்காப்பொல |
| | | | திரு. ஏ.சிமியோன் | மீகமுவ |
| | | | திரு. ஏ. அமரசிறி த சில்வா | மீகமுவ |
| | | | திரு.ஜே.எம். எட்மன் | மீகமுவ |
| 05. | திருமதி. என்.எ. பிரனாந்து | 06 | திரு. எம். பீற்றர் பெரேரா | மகரகம |
| | | | திருமதி. ஆர்.ஏ. குசுமாவதி | மகரகம |
| | | | திரு. ஏ. கேமபால விக்டர் | மகரகம |
| | | | திரு. டபிள்யு.டீ. தர்மதாச | மகரகம |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திரு. ஏ. விக்டர் | மகரகம |
| | | | திருமதி. கே.பீ. அசலின் னோனா | மகரகம |
| 06. | திரு. டீ, தமிதேகம | 04 | திருமதி எம்.டீ. லீலாவதி | மக கும்புக்கடவல |
| | | | திருமதி. ஆர்.டீ. பினீ | கிரிகாவ |
| | | | திருமதி. எச்.எம் காமினோனா | கிரிகாவ |
| | | | திருமதி. ஆர்.எம். ஞானலதா | பொலககவெல |
| 07. | திருமதி. ஆர்.எம். குசுமா குமாரி | 01 | திருமதி. ஏ. சுமனாவதி | மிகிந்தலை |
| 08. | திருமதி. டபிள்யு.எம். வத்சலா | 01 | திருமதி. ஜீ. அஸ்பத்தியெகெதர | வத்தேகம |
| 09. | திருமதி. ஏ.எம். ஆர்.ஏ. ஜயசுந்தர | 01 | திருமதி. ஆர். அகினோனா | கடுவல |
| 10. | திருமதி. நந்தா கருணாசேன | 01 | எல்.ஏ. கீன்காமி | களனி |
| 11. | திருமதி. சுனிலா பெரேரா | 01 | திருமதி. அய். தோன அக்னஸ் | களனி |
| 12. | திருமதி. தரங்கா கருணாசேன | 01 | திருமதி. அய். அன்சினோனா | களனி |
| 13. | திருமதி எம்.பி. குணதாஸ மற்றும் செல்வி. எம்.டீ.அய்.யூ. குணதாஸ | 01 | திருமதி. ஏ, சோமா குணவர்தன<br>திரு. எம்.பி. விபுலசேன | மினுவங்கொட<br>மினுவங்கொட |
| 14. | திரு.கே.பீ. நிசாந்த | 01 | திருமதி. எம்.பி. அயலீன்நோனா | தொம்பே |
| 15. | திரு. எம்.எஸ்.எம். அஸ்ரவ் | 01 | திரு. அப்துல் ரஸ்வான் | களுத்துறை |
| 16. | திருமதி. சீலா பியசிங்க | 01 | திருமதி. எச்.எம் கேரத் மனிக்கே | இப்பாகமுவ |
| 17. | திருமதி. இந்ராணி செனெவிரத்ன | 01 | திருமதி. யசவதி வெத்தசிங்க | மகரகம |
| 18. | திருமதி. திலுபா கருணாரத்ன | 01 | திரு. நோபட் விமலரத்ன | பிலியந்தல |
| 19. | திருமதி. வினிதா மல்லிகா | 01 | திருமதி. சுமனா பெரேரா | திம்பிரிகஸ்யாய |
| 20. | திருமதி. டீ.பீ. விக்ரமாராச்சி | 01 | திரு. எம். துசித்த ரத்ன சில்வா | பலபிட்டியங |
| 21. | திரு. கவிந்ர கல்தேரா | 02 | திருமதி. எச்.பீ. பித்சொகாமி | மாலிம்பட |
| | | | செல்வி. டபிள்யு.ஜீ. குணவதி | குண்டசாலை |

## கதிர்காம யாத்திரை விடுதியின் வருமானம் மற்றும் செலவு விபரங்கள் - 2015

<table>
<tr><th rowspan="2">மாதம்</th><th rowspan="2">அறைகள் ஒதுக்கப்பட்ட தொகை</th><th rowspan="2">வருமானம் ரூபா.</th><th colspan="3">செலவுகள்</th><th rowspan="2">பிற</th></tr>
<tr><th>நீர்ப் பட்டியல் ரூபா.</th><th>மின்சாரப் பட்டியல் ரூபா.</th><th>சுத்தஞ் செய்தல் ரூபா.</th></tr>
<tr><td>ஜனவரி</td><td>35</td><td>34.800.00</td><td>16,944.15</td><td>1,777.20</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>பெப்ரவரி</td><td>34</td><td>29,000.00</td><td>8,352.75</td><td>2,070.00</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>மார்ச்</td><td>19</td><td>17,800.00</td><td>11,116.65</td><td rowspan="3">5,427.18</td><td>9,875.00</td><td>-</td></tr>
<tr><td>ஏப்ரல்</td><td>33</td><td>52,300.00</td><td>11,532.90</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>மே</td><td>36</td><td>33,500.00</td><td>10,783.65</td><td>9,695.00</td><td>-</td></tr>
<tr><td>யூன்</td><td>31</td><td>26,200.00</td><td>20,007.75</td><td>2,490.90</td><td></td><td>-</td></tr>
<tr><td>யூலை</td><td>42</td><td>37,100.00</td><td>13,825.15</td><td>2,490.90</td><td></td><td></td></tr>
<tr><td>ஆகஸ்டு</td><td>45</td><td>45,400.00</td><td rowspan="2">18,548.00</td><td>3,900.00</td><td>9,832.00</td><td>-</td></tr>
<tr><td>செப்ரெம்பர்</td><td>04</td><td>3,800.00</td><td></td><td>-</td><td>-</td></tr>
<tr><td>ஒக்டோபர்</td><td>-</td><td>-</td><td>4,717.50</td><td>240.00</td><td></td><td>-</td></tr>
<tr><td>நவம்பர்</td><td>-</td><td>-</td><td>1,404.15</td><td>276.00</td><td>8,300.00</td><td>-</td></tr>
<tr><td>திசம்பர்</td><td>-</td><td>-</td><td>-</td><td>404.70</td><td>10,000.00</td><td>-</td></tr>
<tr><td>மொத்தம்</td><td></td><td>279,900.00</td><td>117,232.65</td><td>20,545.08</td><td>47,702.00</td><td>-</td></tr>
</table>

# சிரேஸ்ட பிரஜைகளுக்கான ஓய்வூதியத் திட்டம்

சமூக சேவைகள் மற்றும் சமூக நலனோம்புகை அமைச்சின் மேற்பார்வையின் கீழ் 2007 ஆம் ஆண்டு சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு முதியோர்களுக்கான தேசிய செயலகம் மற்றும் இலங்கை சமூக பாதுகாப்புச் சபை ஒன்றிணைந்து இந்த ஓய்வூதியச் சம்பளத் திட்டத்தை அமுற்படுத்த தீர்மானித்ததுடன் அது 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் அமுற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 70 வயதுக்குக் கூடிய தமது பிள்ளைகளாலும் உறவுகளாலும் கவனிக்கப்படாதுள்ள, அரச ஓய்வூதியச் சம்பளம், விதவைச் சம்பளம், ஊழியர் சேமலாபம நிதியம், விவசாய மீன்பிடி அல்லது சுயதொழில் ஓய்வூதியங்கள் அல்லது வேறு வகையிலான சமூக காப்புறுதித் திட்ட பங்களிப்பு பணம் கிடைக்கப்படாத மிகவும் உதவியற்ற நபர்களை இதில் சேர்த்துக்கொள்ளப்படும். அத்துடன் நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டுள்ள, அங்கவீனமுற்றோர்கள் இதில் முன்னுரிமை பெறுகின்றனர்.

இந்த ஓய்வூதியச் சம்பளத்திட்டத்திற்கு தேவையான நிதியாக ரூபா 03 மில்லியன் நிதி சுப்பிரி வாசனா லொத்தர் நிதியத்தால் வழங்கப்பட்டுள்ளதுடன் இலங்கைச் சமூக பாதுகாப்பு சபையினால் அந்தப் பணம் முதலீடு செய்யப்பட்டு மாதாந்தம் ஓய்வூதியச் சம்பளங்களாக செலுத்தப்படுகிறது.

தகைமையுடைய சிரேஸ்ட பிரஜைகளுக்காக மாதாந்தம் ரூபா 500 வீதம் 89 பயனாளிகளுக்கு இந்த நன்மைகள் வழங்கப்பட்டுள்ளன.

# முதியோர்களுக்கான பராமரிப்பு சபை

2000 ஆம் ஆண்டு இலக்கம் 09 ஐ கொண்ட முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையானது நீதிமன்றச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தலைவர் உட்பட உறுப்பினர்கள் ஐந்து பேர்களைக் கொண்டதாகும். இதன் தற்போதைய தலைவர் ஓய்வூபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியாகும்.

இதன் பணியாவது, பிள்ளைகள் மூலம் கவனிக்கப்படாத, 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிப பெற்றோர்களுக்கு அந்த கவனிக்காத பிள்ளைகளிடம் இருந்து வாழ்வதற்கு ஏதும் பராமரிப்பு பணம் பெற்றுக்கொடுப்பதாகும். அதன் பிரகாரம் இந்த பிள்ளைகள் மூலம் முதியோர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம் இரண்டு தரப்பினர்களையும் அழைத்து விசாரிக்கப்படுகிறது. பெற்றோர்களின் வருமானம் மற்றும் தங்கியிருப்பதற்கான தேவை ஆகியவை கவனத்தில் கொள்ளப்படுகிறது.

இங்கு பெற்றோர்களுக்கு பராமரிப்பு பணம் கோரப்படும் பொழுது தமது பிள்ளைகளிடத்திலும் தமது வளர்ப்பு பிள்ளைகளாக வளர்த்த பிள்ளைகளிடத்திலும் (யுனழிவநன ஊாடைன) பராமரிப்பு பணம் கோர முடியும். மேலும் ஏதேனும் பெற்றோரின் வயது 60 க்குகறைவாக இருக்கும் நிலையில் அவர்களின் அன்றாட பராமரிப்புக்களை செய்துகொள்ள முடியாத உடல் அங்கவீனமுற்றவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் 24 (ஐ) ஆம் பிரிவின் கீழ் பராமரிப்பு பணம் கோர முடியும்.

முதியோர்களுக்கான பராமரிப்புச் சபையிடம் கோரிக்கை விடுப்பதற்குத் தேவையான விண்ணப்பம் பிரதேசத்தின் கிராம சேவை உத்தியோகத்தரிடமும் பிரதேச செயலாளர் அலுவலகத்திடம் இருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் இந்த சபைக்கு குடும்ப பிணக்குகள், காணிப் பிணக்குகள் அல்லது சொத்து சம்பந்தமாக குடும்பங்களுக்கிடையிலுள்ள பிணக்குகள் போன்றவைகளை தீர்த்து வைக்கும் அதிகாரம் இந்தச் சட்டத்தின் கீழ் இல்லை.

இந்த பராமரிப்புச் சபையினால் வழங்கப்படுகின்ற ஏதேனும் பராமரிப்புப் பணம் செலுத்துதல் சம்பந்தமான உத்தரவு ஒன்றை ஏதும் பிள்ளையினால் செய்யாதிருக்கும்போது சட்டத்தின் 32 ஆவது பிரிவின் பிரகாரம் சபைக்கு அந்த தீர்மானத்தை அமுற்படுத்துவதற்காக நீதவான் நீதிமன்றத்திற்கு சாட்ட முடியும். அதன்போது நீதவானுக்கு அந்த உத்தரவை பராமரிப்பு கட்டளைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட கட்டளையொன்றை செயற்படுத்தும் விதத்தில் அமுற்படுத்தும் அதிகாரம் உண்டு.

# முதியோர்களுக்கான பராமரிப்பு சபை - 2015

| | | |
|---|---|---|
| 2015 வருடத்தின் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகள் | - | 112 |
| காணிப் பிணக்கு போன்ற தொடர்பற்ற முறைப்பாடுகள் | - | 09 |
| அதன்டி இறுதிவரை விசாரிக்கப்பட்ட முறைப்பாடுகள் | | 103 |

| | | | |
|---|---|---|---|
| சபையினால் தீர்த்துவைக்கப்பட்ட முறைப்பாடுகள் | - | 58 | 103 |
| பல காரணங்களினால் நிராகரிக்கப்பட்டதும் இடமளிக்க முடியாத முறைப்பாடுகள் | - | 14 | |
| வாபஸ் பெற்றுள்ள முறைப்பாடுகள் | - | 04 | |
| தற்சமயம் விசாரிக்கப்பட்ட வண்ணமுள்ள முறைப்பாடுகள் | - | 27 | |

## முதியோர்களுக்கான பராமரிப்புச் சபை உறுப்பினர்கள்

தலைவர் - திரு.டபிள்யு.கருனாரத்ன

செயலாளர் - திரு. எம்.ஜீ. புஞ்சிபண்டா

**சபையின் உறுப்பினர்கள்**

1. திரு. டீ.எல்.ஆர். சுபசிங்க
2. திரு. கலாநிதி லீல் குணசேகர
3. திரு. கே. மார்க்கண்டு
4. திரு. ஏ.ஆர்.ஏ.எம். லாபீர்

# முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்குக் கொள்கை

## பொதுவான கணக்குக் கொள்கை

அ) இந்த நிறுவனமானது நிதிக் கூற்றினை தயாரிப்பது தொடர்பில் கணக்கீட்டுக் கொள்கை மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமனம் போன்றவற்றினைப் பின்பற்றுகின்றது.

### ஆ) அட்டுறுவினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

### இ) அரச கொடைகள்

முதியோர்களுக்கான தேசிய செயலகம் வருமானம் கிடைக்கப் பெறுகின்ற நிறுவனமல்ல. இது திறைசேரியில் இருந்தே நிதியினைப் பெற்று இயங்கி வருகின்றது.

திறைசேரியின் மூலம் கிடைக்கப் பெறும் பணத்தில் மீண்டு வரும் செலவினங்களாக எடுத்துக் கொள்ளப்படும் பணம் வருமானம் மற்றும் செலவினக் கணக்கிலும், மூலதனச் செலவானது அரச மூலதனக் கொடையில் பிரதிபலிக்கப்படுகின்றது.

### நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத் தேய்வு

**அ)**பெறுமானத் தேய்வுக் கொள்கை

I. நிலையான சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வுக் கொள்கையானது கொள்வனவு செய்யப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு அகற்றப்படும் ஆண்டில் பெறுமானத் தேய்வு செய்யப்படுவதில்லை.

II. கீழ்வரும் நிலையான சொத்துக்களுக்கு நேர் கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு கணிப்பிடப்படும்.

| | | |
|---|---|---|
| வாகனம் | - | 10மூ |
| தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | - | 15மூ |
| இயந்திரங்கள் மற்றும் பொருத்தல்கள் | - | 20மூ |

ஆ) மூலதனச் செலவினம் மற்றும் மீண்டெழும் செலவினம் நிதி பெற்றுக் கொள்வது தொடர்பான அறிக்கைகள் உள்ளக்கப்பட்டுள்ளன.

இ) நிலையான சொத்துக்களின் கீழ்க் காட்டப்பட்டுள்ள (தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்) சொத்துக்களில் சில பிரதேச செயலக மட்டத்தில் பேணப்பட்டு வருகின்றன.

பின்னிணைப்பு –1எ

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்
# 2015 மார்கழி 31ம் திகதிய நிதி நிலபரக் கூற்று

| விபரம் | குறிப்பு | 2015 (ரூபா) | 2014 (ரூபா) |
|---|---|---|---|
| **நிலையான சொத்துக்கள்** | | | |
| முதலீடு - நிலையான வைப்புக்கள் | | 6,974,959.28 | 6,488,334.23 |
| தளபாடங்களும் மற்றும் அலுவலக உபகரணங்களும் | | 10,516,235.67 | 8,351,777.90 |
| வாகனங்கள் | | 13,640,500.00 | 10,400,000.00 |
| எந்திரங்களும் மற்றும் பொருத்துதல்களும் | | 13,000,000.00 | - |
| | | **49,080,937.36** | **26,648,169.09** |
| | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்குப் பொருட்கள் | **4** | 708,085.30 | 630,815.49 |
| கிடைக்க வேண்டிய வாகன வருமானம் | | 881,000.00 | - |
| மீள் நிரப்பப்படாத பண்டிகை முற்பணம் | 3 | 6,250.00 | |
| ஊழியர் கடன் | 2 | 3,952,557.00 | 3,595,190.00 |
| கிடைக்க வேண்டிய வங்கிக் கட்டணம் | 1 | 5,018,513.47 | 3,021,250.04 |
| நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல் | | 10,566,405.77 | 7,338,255.53 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **59,647,343.13** | **33,986,424.62** |
| **பொறுப்புக்கள்**<br>**நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| கணக்காய்வுக் கட்டணங்களை ஒதுக்குதல். | | 80,000.00 | 80,000.00 |
| அலுவலகக் குழாமுக்கான கடன் நிதியம் | 7 | 572,022.56 | 425,527.40 |
| பொது வைப்புக்கள் | 6 | 4,020,208.87 | 3,718,492.81 |
| திரண்ட செலவுகள் | 5 | 186,319.88 | 60,721.80 |
| பணிக்கொடையினை ஒதுக்குதல் | 8 | 10,720,215.00 | 9,447,291.00 |
| முதியோர் தாபரிப்பு நிதியம் | 9 | 324,187.76 | 362,187.76 |
| ஹர்மு நிதியம் | | - | 104,613.52 |
| | | **15,902,954.07** | **14,198,834.29** |
| **நிலையான சொத்துக்கள்** | | | |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **15,902,954.07** | **14,198,834.29** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **43,744,389.06** | **19,787,590.33** |
| **தேறிய சொத்துக்கள்/அதிகரிப்பு** | | | |
| அரச வழங்கல்கள் (மூலதனம்) | **10** | 43,744,389.05 | 19,770,735.27 |
| திரண்ட நிதியம் | **11** | 27,895,000.06 | 9,100,000.00 |
| திரண்ட மேலதிகம்/பற்றாக்குறை | **12** | (13,917,384.62) | (9,083,144.06) |
| | | | |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | | **43,744,389.06** | **19,787,590.33** |
| | | | |

**ஒப்பம் -**
**மகிந்த செனெவிரத்ன,**
**தவிசாளர்**
**முதியோர்களுக்கான தேசிய சபை.**

**ஒப்பம் -**
**சுவிந்த எஸ். சிங்கப்புலி,**
**பணிப்பாளர்,**
**முதியோர்களுக்கான தேசிய செயலகம்.**

பின்னிணைப்பு – 1 பி

# முதியோர்களுக்கான தேசிய செயலகம்

## 2015 மார்கழி 31 ம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கை

| விபரம் | குறிப்பு | 2015 (ரூபா) | 2014 (ரூபா) |
|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | | |
| அரச வழங்கல்கள் | 20 | 134,003,961.59 | 89,983,264.73 |
| ஏனைய வருமானம் | | 1,468,905,973 | 1,005,562.20 |
| **மொத்த வருமானம்** | | **135,472,867.56** | **90,988,826.93** |
| | | | |
| **செயற்பாட்டுச் செலவுகள்** | | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 13 | 54,989,855.75 | 41,428,976.26 |
| பிரயாணச் செலவுகள் | 14 | 1,908,541.00 | 1,224,052.42 |
| வழங்கல்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள். | 15 | 1,580,016.38 | 1,981,566.14 |
| பராமரிப்புச் செலவுகள் | 16 | 2,453,787.18 | 599,128.79 |
| ஒப்பந்தச் சேவைகள் | 17 | 3,817,027.91 | 5,929,680.78 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 18 | 66,657,324.83 | 35,937,720.32 |
| தேய்மானத்தின் அளவு | 19 | 6,444,895.19 | 4,490,344.58 |
| **மொத்த செயற்பாட்டுச் செலவுகள்** | | **137,851,448.24** | **91,591,459.29** |
| **குறிப்பிட்ட காலத்திற்கான தேறிய பற்றாக்குறை** | | **(2,378,580.68)** | **(602,642.36)** |
| | | | |

**ஒப்பம்**

**மகிந்த செனெவிரத்ன,**
தவிசாளர்,
முதியோர்களுக்கான தேசிய சபை.

**ஒப்பம்**

**சுவிந்த எஸ். சிங்கப்புலி,**
பணிப்பாளர் (பதில்)
முதியோர்களுக்கான தேசிய செயலகம்

பின்னிணைப்பு – 1 சீ

**முதியோர்களுக்கான தேசிய செயலகம்**

# 2015 டிசம்பர் 31 திகதிய நிதிப்பாய்ச்சல் கூற்று

| விபரம் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினூடாக நிதியப் பாய்ச்சல்.**<br>செயற்பாட்டு நடவடிக்கைகள் மேலதிகம்/பற்றாக்குறை | (602,642.36) | (602,642.36) |
| **நிதிசாரா செயற்பாடுகள்** | | |
| தேய்மானம் | 6,044,895.19 | 4,490,344.58 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| வருட இறுதியில் இருப்பு அதிகரத்தல் | (77,269.81) | (20,404.23) |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | |
| பணிக்கொடை | 1,272,924.00 | 2,065,482.00 |
| ஊழியர் கடன் இனிவருங் காலத்தில் அதிகரித்தல். | 146,495.16 | (73,294.00) |
| மீள் நிரப்பப்படாத பண்டிகை முற்பணம் குறைதல் | 34,750.00 | (19,000.00) |
| நிலையான சொத்துக்களின் வட்டி அதிகரித்தல் | (486,625.05) | (616,538.58) |
| கிடைக்க வேண்டிய வங்கிக் கட்டணம் | 50,000.00 | (50,000.00) |
| கணக்காய்வுக் கட்டணங்களின் ஒதுக்கீட்டினை அதிகரித்தல். | - | 20,000.00 |
| ஊழியர் கடன் நிதி அதிகரித்தல் | (357,367.00) | 148,604.63 |
| பொது வைப்புக்களில் அதிகரிப்பு | (301,716.06) | (600,866.52) |
| திரண்ட செலவுகளில் குறைவு . | 125,598,081 | (7,605,807.36) |
| WHO நிதியம் | (104,613.52) | - |
| கிடைக்க வேண்டி வாகன வருமானம் | (881,000.00) | - |
| கடந்த வருடத்தின் இணக்கம் | (2,455,659.00) | (2000.00) |
| **செயலியக்கச் செயற்பாடுகளினூடன தேறிய காசுப் பாய்ச்சல்** | **1,235,263.43** | **(2,866,121.84)** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளினூடான தேறிய காசுப் பாய்ச்சல்** | | |
| சொத்துக்கள், எந்திப்பொறிகள் மற்றும் பொருத்துதல்களைக் கொள்வனவு செய்தல். | (14,991,038.41) | (5,380,203.29) |
| **நிதிசார் செயற்பாடுகளினூடான தேறிய காசுப் பாய்ச்சல்** | **(14,991,038.41)** | **(5,380,203.29)** |
| **நிதிசார் செயற்பாடுகளினூடான காசுப் பாய்ச்சல்** | | |
| அரச வழங்கல் (மூலதனம்) | 9,996,038.41 | 10,570,735.27 |
| திறைசேரியின் வழங்கல் (வாகனம்) | 5,795,000.00 | - |
| முதியோர் தாபரிப்புத் திட்டம் | (38,000.00) | (1,000.00) |
| **நிதிசார் செயற்பாடுகளினூடான தேறிய காசுப் பாய்ச்சல்** | **15,753,038.41** | **10,569,735.27** |
| நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சலின் தேறல் அதிகரித்தல் | 1,997,263.43 | **2,323,410.14** |
| காலப்பகுதி ஆரம்பத்திலிருந்த நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல் | 3,021,250.04 | 697,839.90 |
| காலப்பகுதி இறுதியிலிருந்த நிதி மற்றும் நிதிசார் பாய்ச்சல். | **5,018,513.47** | **3,021,250.04** |
| | | |

**ஒப்பம்**
**மகிந்த செனெவிரத்ன,**
தவிசாளர்,
முதியோர்களுக்கான தேசிய சபை.

**ஒப்பம்**
**சுவிந்த எஸ். சிங்கப்புலி,**
பணிப்பாளர்
முதியோர்களுக்கான தேசியசெயலகம்

# மேலதிக பட்டியல்கள்

| 2014 (ரூபா) | குறிப்பு 13 | | ஆளுக்குரிய வேதனாதிகள் | 2015.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 21,682,066.40 | | (I) | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 23,277,607.29 |
| 3,604,843.37 | | (II) | ஊழியர் சேமலாப நிதியம் | 3,738,555.07 |
| 901,210.65 | | (III) | ஊழியர் நம்பிக்கை நிதியம் | 934,638.60 |
| 328,285.92 | | (IV) | மேலதிக நேரக் கொடுப்பனவு | 491,000.71 |
| 72,644.15 | | (V) | விடுமுறை தினச் சம்பளம் | 79,214.00 |
| 9,804,423.86 | | (VI) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 10,197,140.00 |
| 5,035,501.91 | | (VII) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு | 16,271,700.08 |
| **41,428,976.26** | | | **மொத்தம்** | **54,989,855.75** |

| 2014 (ரூபா) | குறிப்பு 14 | | பிரயாணச் செலவுகள் | 2015.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 1,164,217.50 | | (I) | உள்நாடு | 1,908,541.00 |
| 59,834.92 | | (II) | வெளிநாடு | - |
| **1,224,052.42** | | | **மொத்தம்** | **1,908,541.00** |

| 2014 (ரூபா) | குறிப்பு 15 | | வழங்கல்கள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | 2015.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 1,466,631.84 | | (I) | எழுதுகருவிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள். | 920,688.02 |
| 502,934.30 | | (II) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி | 643,328.36 |
| 12,000.00 | | (iii) | சீருடைகள் | 16,000.00 |
| **1,981,566.14** | | | **மொத்தம்** | **1,580,016.38** |

| 2014 (ரூபா) | குறிப்பு 16 | | பராமரிப்புச் செலவுகள் | 2015.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 396,155.14 | | (I) | வாகனங்கள் | 2,221,756.98 |
| 202,973.65 | | (II) | எந்திரப் பொறித் தொகுதிகள் மற்றும் பொருத்துதல்கள். | 232,030.20 |
| **599,128.79** | | | மொத்தம் | **2,453,787.18** |

| 2014 (ரூபா) | குறிப்பு 17 | | ஒப்பந்தச் சேவைகள் | 2015.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 166,032.00 | | (I) | போக்குவரத்து | 199,384.00 |
| 450,892.74 | | (II) | தபால் மற்றும் தொலைத் தொடர்பாடற் சேவைகள் | 705,406.40 |
| 866,049.85 | | (III) | மின்சாரம் மற்றும் எரிபொருள் | 799,534.98 |
| 246,756.00 | | (IV) | சுத்தஞ் செய்வதற்கான கட்டணம் | 266,972.16 |
| 25,990.00 | | (V) | பத்திரிகை | 29,618.50 |
| 33,269.15 | | (VI) | சிற்றுண்டிச் செலவுகள் | 32,941.00 |
| 51,904.00 | | (VII) | கணக்காய்வுக் கட்டணம் | 35,631.00 |
| 451,550.00 | | (VIII) | தேசிய சபைக்கான கொடுப்பனவுகள் | - |
| 987,929.00 | | (IX) | பராமரிப்புச் சபைக்கான கொடுப்பனவுகள் | - |
| 582,326.04 | | (X) | பிற கொடுப்பனவுகள் | 468,615.87 |
| 1,500.00 | | (XI) | வங்கிக் கட்டணம் | 6,000.00 |
| 2,065,482.00 | | (XII) | பணிக்கொடை | 1,272,924.00 |
| **5,929,680.78** | | | **மொத்தம்** | **3,817,027.91** |

| 2014 (ரூபா) | குறிப்பு 18 | | ஆளுக்குரிய வேதனாதிகள் | 2015.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 3,784,490.00 | | (I) | கிராமிய முதியோர் சங்கங்களை அமைத்தல் | 2,942,367.00 |
| 458,937.75 | | (II) | அடையாள அட்டைகளை வழங்குதல் | 800.365.00 |
| 1,870,962.06 | | (III) | பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களை அமைத்தல் மற்றும் சுய தொழில் உதவி வழங்குதல். | 1,990,570.00 |
| 1,775,344.88 | | (IV) | வெளியீடுகள் | 1,798,071.00 |
| 3,984,751.00 | | (V) | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | 9,974.448.50 |
| 7,716,450.00 | | (VI) | மருத்துவ சிகிச்சைகளை நடாத்துதல். கண் வில்லைகள் மற்றும் செவிப்புலக் கருவிகளை வழங்குதல். | 11,846,330.00 |
| 6,603,329.28 | | (VII) | சர்வதேச முதியோர் தினக் கொண்டாட்டம் | 10,058,794.01 |
| 1,248,180.61 | | (VIII) | முதியோர் இல்லங்களுக்கு உதவி வழங்குதல். | 8,128,448.76 |
| 301,837.10 | | (IX) | பிற செலவுகள் | 383,868.50 |
| 5,206,965.44 | | (X) | முதியோர் இல்லங்களைப் புதுப்பித்தலும் மற்றும் பராமரித்தலும். | 10,850,471.73 |
| 2,986,472.20 | | (XI) | பயிற்சி மற்றும் திறன் விருத்தி | 4,041,754.23 |
| - | | (XII) | பராமரிப்புச் சபைக்கான கொடுப்பனவுகள் | 929,470.50 |
| - | | (XIII) | ரூபா. 2000/- கொடுப்பனவின் நிர்வாகம்சார் செலவுகள் | 2,912,365.60 |
| **35,937,720.32** | | | மொத்தம் | **66,657,324.83** |

| 2014 (ரூபா) | குறிப்பு 19 | | தேய்மானத்தின் அளவு | 2015.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| 1,968,476.02 | | (I) | வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 2,167,518.09 |
| 1,655,000.00 | | (II) | வாகனங்கள் | 2,154,000.00 |
| 866,868.56 | | (III) | எந்திரப்பொறித் தொகுதிகள் மற்றும் பொருத்துதல்கள். | 1,672,877.10 |
| **4,490,344.58** | | | | **6,444,895.19** |

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்து

முதியோர்களுக்கான தேசிய சபையினால் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு நிதிக் கூற்று மற்றும் அதே திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதி செயலாற்றுகை மற்றும் நிதிப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கியல் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிப்பு தகவல்களின் சாராம்சம் உள்ளடங்கும் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்று, 1971 ஆம் இலக்கம் 38 ஐ கொண்ட நிதிச் சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2000 ஆம் இலக்கம் 09 ஐ கொண்ட முதியோர்களுக்கான உரிமைகளை பாதுகாக்கும் சட்டத்தின் 20 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசின் அரசியலமைப்பின் 154 (1) ஆம் யாப்பில் உள்ளடங்கும் ஒழுங்குமுறைகளின் பிரகாரம் எனது பணிப்பின ் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதிச் சட்டத்தின் 14 (2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரகடனப்படுத்தப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துத் தெரிவிப்பு மற்றும் அவதானிப்பு இந்த அறிக்கையில் தரப்பட்டுள்ளது. நிதிச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் விவரமான அறிக்கை ஒன்று சபையின் தலைவருக்கு 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது.

## கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கருத்து

இந்த அறிக்கையில் 2.2. பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்கள் மூலமான அழுத்தங்கள் தவிர்ந்த, நிதிக் கூற்றுக்கள் மூலம் 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முதியோர்களுக்கான தேசிய சபையின் நிதி நிலைமைகள் மற்றும் அதே திகதியுடன் முடிவுற்ற வருடத்தின் நிதிச் செயற்பாடு மற்றும் நிதி மூலங்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு அமைவாகவும் உண்மையாகவும், நியாயமான நிலைமைகளைக் காட்டும் விதத்திலும் உள்ளது என்பது எனது கருத்தாகும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. } எல்ஈடபிள்யு/சீ/என்சீஈ/1/15/06 මබේ අංකය
உமது இல.
Your No. }
My No.

දිනය
திகதி
Date } 2016 செப்தெம்பர் 09

தலைவர்,
முதியோர்களிற்கான தேசிய மன்றம்

**முதியோர்களிற்கான தேசிய மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

முதியோர்களிற்கான தேசிய மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர் உரிமைகள் பாதுகாப்பு அதிகாரச்சட்டத்தின் 20(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து முதியோர்களிற்கான தேசிய மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

--------------------------------------------------

அரச மானியங்களை கணக்கு வைக்கும் போது பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராததுடன் மீளாய்வாண்டிலும் 2012 ஆம் ஆண்டிலும் பொது திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 14,895,000 பெறுமதியான 02 மோட்டார் வாகனங்களுக்கான காலக்கழிவினை கணிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 13,000,000 பெறுமதியான காணி நிதி நிலைமைக் கூற்றில் ஒதுக்கத்தின் கீழ் நன்கொடையாக பதியப்பட வேண்டுமெனினும் காணியாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பயிற்சி மற்றும் அறிவூட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 288,264 செலவினம் மூலதன செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணத்தால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 288,264 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கதிர்காமம் முதியோர் இல்லம் மற்றும் வழிகாட்டல் நிலையத்தின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் தேசிய மன்றத்திற்கு

கையளிக்கப்பட்டிருந்ததெனினும், அந்த சொத்துக்களை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள் ரூபா 2,378,580 பற்றாக்குறையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 602,642 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 1,775,938 வீழ்ச்சியொன்றினை காண்பித்திருந்தது. அரசாங்க மானியம் ரூபா 44,020,697 ஆல் அதிகரித்திருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செலவினம் ரூபா 46,259,979 இனால் அதிகரித்திருந்தமை இதற்கு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தது. மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் ஊழியர் சம்பளங்கள் மற்றும் நடைமுறையல்லா சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றை கருத்திற் கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டு முதல் மன்றத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

2000 இன் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

- முதியோரின் சேமநலன் மற்றும் உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பில் அரசுக்கு ஆலோசனை வழங்குதல், இலங்கையின் பாரம்பரிய மரபுகளின் அடிப்படையில் அமைந்த குடும்ப அலகினை வலுவூட்டுவதற்காக அரசு மற்றும் ஏனைய தகுதிவாய்ந்த நிறுவனங்களுக்கு நிகழ்ச்சித்திட்டங்களை பரிந்துரை செய்தல்.

- முதியோரின் சேமநலன் மற்றும் உரிமைகளை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பதற்காக உரிய அமைச்சு, மாகாண அதிகாரசபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்ட செயலகங்கள், சமய அனுஸ்டான நிறுவனங்கள்,

அரசல்லாத ஒழுங்கமைப்புக்கள் மற்றும் தனியார் துறையின் அமைப்புக்களிடம் வினவி தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

- முதியோர் தொடர்பில் சரியானதும் நாளதுவரையாக்கப்பட்டதுமான புள்ளிவிபரவியல் பதிவேடுகளைப் பேணுதல்.

- கைவிடப்பட்ட முதியோருக்காக தங்குமிடத்துடன் கூடிய சேமநல நிலையங்கள், விளையாட்டு நிலையங்கள், பகல் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் ஏனைய தகுதிவாய்ந்த நிறுவனங்களை ஸ்தாபிப்பதற்காக ஊக்கமளித்தல் மற்றும் அவ்வாறான நிலையங்களுக்கும் நிறுவனங்களுக்கும் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- வயது முதிர்ந்தோருக்காக சுகாதாரக் காப்பீட்டு நலன் உத்தேசத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் அமுல்படுத்துதல்.

- தேவையான சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வயது முதிர்ந்தோருக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் இந்த அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் சலுகையொன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான முதியோர்களுக்கு உதவி வழங்குதல்.

முதியோர்களிற்கான தேசிய மன்றத்தின் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 16 நோக்கங்கள் வரை இருந்ததுடன் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் அவற்றுள் 08 நோக்கங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டு அதற்காக ரூபா 47,000,000 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதிலுள்ள செயன்முன்னேற்றம் பின்வருமாறாகும்.

**(அ) முதியோர் குழுக்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்**

(i) மீளாய்வாண்டில் 950 கிராமிய முதியோர் குழுக்கள், 75 பிரதேச முதியோர் அதிகாரக் குழுக்கள், 11 மாவட்ட முதியோர் அதிகாரக் குழுக்கள் மற்றும் 06 மாகாண முதியோர் அதிகாரக் குழுக்கள் என்றவாறு 1042 குழுக்களை ஸ்தாபிப்பதற்கு ரூபா 5,672,500 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததெனினும் 640 கிராமிய முதியோர் குழுக்கள், 06 பிரதேச முதியோர் அதிகாரக் குழுக்கள், 02 மாவட்ட முதியோர் அதிகாரக் குழுக்கள் மற்றும் 03 மாகாண முதியோர் அதிகாரக் குழுக்கள் என்றவாறு 651 குழுக்கள் மாத்திரமே உண்மையாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 391 முதியோர் குழுக்களை

5

ஸ்தாபிக்க முடியாதிருந்ததுடன், அதற்கென ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 2,322,500 சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 சனவரி 06 ஆந் திகதிய 2011/01 ஆம் இலக்க முதியோர்களிற்கான தேசிய மன்றத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் கிராமிய முதியோர் குழு எனும் பெயருடன் ரூபா 3,500 ஆகக்குறைந்த மீதியுடன் சேமிப்பு வங்கியில் கணக்கொன்று பேணப்பட வேண்டுமெனினும் 385 குழுக்களின் கணக்குகள் தொடர்பில் மீதிகளை உறுதிப்படுத்திக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முதியோர் அடையாள அட்டைகளை வழங்குதல்**

மன்றத்தினால் 60 வயதினை விட கூடிய நபர்களுக்காக முதியோர் அடையாள அட்டைகளை வழங்குவதற்கு வருடாந்தம் திட்டமிடப்பட்டு அதற்காக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தெனினும், வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் அளவு தொடர்பில் பிரதேச செயலகங்களில் சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடைமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த காரணத்தால் இது வரையிலும் வழங்கப்பட்ட மொத்த முதியோர் அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதனை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) சுயதொழில்களுக்காக நிதியுதவி வழங்குதல்**

முதியோர்களின் சேமநலன் மற்றும் உரிமைகளை மேம்படுத்தும் நோக்கத்திற்கிணங்க சிரேஷ்ட பிரஜைகளுக்காக சுயதொழில்களுக்கான உதவியாக 40 பிரதேச செயலகங்களின் 120 சுயதொழில் புரிவோருக்காக ரூபா 1,750,570 தொகை வழங்கப்பட்டிருந்தது.

இந்த உதவுதொகைகள் உரிய பிரகாரம் சுயதொழில்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் 05 பிரதேச செயலகங்களில் மாத்திரம் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் 105 சுயதொழிலாளர்களிடமிருந்து அந்தப் பணம் பெறப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அறிவூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்**

---

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 721 நிகழ்சசித்திட்டங்களுக்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 10,000,000 ஆகும்.

எனினும் ஆண்டிறுதியில் 672 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன், 49 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்த முடியாது போயிருந்தது. நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் செயன்முன்னேற்ற அறிக்கைகள் பிரதேச செயலகங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அது தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ) முதியோர் இல்லங்களின் மேற்பார்வை**

---

மீளாய்வாண்டில் 87 முதியோர் இல்லங்கள் மன்றத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருந்ததெனினும் அவற்றுள் 72 இல்லங்கள் தொடர்பில் மன்றத்தினால் மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) முதியோர் இல்லங்களுக்கு நிதியுதவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்**

---

மீளாய்வாண்டினுள் முதியோர் இல்லங்களுக்கு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும் கட்டிடங்களை புனரமைப்பதற்குமாக முறையே ரூபா 8,280,120 மற்றும் ரூபா 10,941,728 தொகை பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு வழங்கிய பணத்தில் ரூபா 8,128,448 செலவிடப்பட்டிருந்ததுடன், கோரப்பட்ட உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளனவா எனும் பின்தொடரலொன்று முதியோர் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) கட்டிடங்களை புனரமைப்பதற்காக பிரதேச செயலகங்களுடாக ரூபா 10,880,471 வழங்கப்பட்டிருந்தது. அந்த பழுதுபார்த்தல்களுக்குரிய மாதாந்த செயன்முன்னேற்றம் முதியோர் செயலகத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமெனினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அதிகாரச்சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிராத சந்தர்ப்பங்கள்

---

2000 இன் 9 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் முதியோர்களிற்கான தேசிய மன்றத்தால் பின்வரும் நோக்கங்கள் மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) இலங்கையின் பாரம்பரிய மரபுகளின் அடிப்படையில் அமைந்த குடும்ப அலகினை வலுவூட்டுவதற்காக அரசு மற்றும் ஏனைய தகுதிவாய்ந்த நிறுவனங்களுக்கு நிகழ்ச்சித்திட்டங்களை பரிந்துரை செய்தல்.

(ii) முதியோர் தொடர்பில் சரியானதும் நாளதுவரையாக்கப்பட்டதுமான புள்ளிவிபரவியல் பதிவேடுகளைப் பேணுதல்.

(iii) முதியோர்களின் பிரச்சினைகளுக்கு தாக்கமளிக்கும் பிரதான காரணங்கள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகள் மற்றும் அபிலாஷைகளை இனங்காணும் எண்ணத்துடன் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் அந்த காரணங்களை ஒழித்தல் அல்லது மாற்றியமைப்பதற்காகவும் அவர்களின் அந்த தேவைப்பாடுகள் மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(iv) முதியோர்களின் பிரச்சினைகள், தேவைப்பாடுகள் மற்றும் அபிலாஷைகள் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டும் நோக்கில் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளின் கண்டுபிடிப்புகளுக்கு பொருத்தமான நடவடிக்கைகளுடாக உரிய பதிலளித்தல்.

(v) முதியோர்களின் நிலையை முன்னேற்றுவதற்காக அரசினாலும் தொண்டர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர் குழுக்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உத்தேசத் திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் தொடர்புபடுத்தல்.

(vi) வயது முதிர்ந்தோருக்காக சுகாதாரக் காப்பீட்டு நலன் உத்தேசத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் அமுல்ப்படுத்துதல்.

(vii) முதியோர்கள் அறிந்து கொள்வதற்காக முதியோர்களுக்காக உள்ள சம்பளம் செலுத்தும் மற்றும் சம்பளமற்ற வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் பெயர்ப்பட்டியலொன்றை பேணிச் செல்லல் மற்றும்

இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு வருமானம் கிடைக்கும் சேவையொன்றில் ஈடுபடுவதற்கு உதவிபுரிதல்.

(viii) பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக முதியோர்களின் ஆற்றல்கள் மற்றும் திறமைகளை உள்ளடக்கிய அவர்கள் தொடர்பான பெயர்ப்பட்டியலொன்றை பேணிச்செல்லல்.

## 4.2 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதியோர் உரிமைகள் மேம்படுத்தல் உதவி உத்தியோகத்தர்கள் 96 பேரை நியமித்து பிரதேச செயலகங்களுக்கு இணைப்பு செய்யப்பட்டிருந்ததெனினும், அந்த உத்தியோகத்தர்கள் மூலம் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படாத செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முதியோர் உரிமைகள் மேம்படுத்தல் உதவி உத்தியோகத்தர்களை பிரதேச செயலகங்களுக்காக இணைப்புச் செய்யும் போது உரிய முறைமையொன்று பின்பற்றப்பட்டிராமையால் சில மாவட்டங்களில் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவி ஆகியன 2011 ஆம் ஆண்டு முதலே வெற்றிடமாக காணப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதியோர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காக தேசிய சேமிப்பு வங்கியில் காணப்படும் ரூபா 6,974,959 தொகையான நிலையான வைப்பு மற்றும் அதிலிருந்தான வருடாந்த வட்டி வருமானம் ஆகியன முதியோரின் நலன்புரி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(ஆ) மன்றத்தின் நானாவித வைப்புக்களாக ரூபா 4,020,208 தொகையான பொறுப்பொன்று கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்தப் பெறுமதியில் ரூபா 1,370,041 தொகையினை குறிப்பாக இனங்காண முடியாது போயிருந்தது.

**4.4 முறையாக கையேற்கப்படாத காணி மற்றும் கட்டிடங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

---

2003 ஆகஸ்ட் 22 ஆந் திகதி சமூக சேவைகள் பணிப்பாளரால் கதிர்காமத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லம் மற்றும் வழிகாட்டல் நிலையம் ஆகியவற்றுக்கு சொந்தமான அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டு 12 வருட காலம் கடந்திருந்ததெனினும் அந்த காணி மற்றும் கட்டிடத்தை அளந்து உரித்துறுதியொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 2004 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பழுதுபார்த்தல்கள் மற்றும் கட்டுமானங்களுக்காக ரூபா 11,974,436 மன்றத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

**4.5 ஊழியர் பணிக்கொடைக்கான நிதியேற்பாட்டிற்காக நிதியமொன்றினை உருவாக்குதல்**

---

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மன்றத்தின் கணக்குகளில் பணிக்கொடை கொடுப்பனவிற்கான நிதியேற்பாடு ரூபா 10,720,215 ஆக இருந்ததெனினும், எதிர்காலத்தில் ஏற்படும் பணிக்கொடை செலுத்தும் சந்தர்ப்பங்களில் அதற்காக பயன்படுத்துவதற்கு இயலுமான விதத்தில் அதற்கு சமனான தொகையொன்று முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

---

2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததெனினும் அது கட்டுப்பாட்டுச் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

---

செயல்நடவடிக்கைத் திட்டத்தை நிறைவேற்றும் செயன்முன்னேற்றத்தினை காலரீதியாக பரிசீலனை செய்வதற்காக நடைமுறையொன்று சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது தேசிய மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுப் பரப்புக்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | - | உரிய பிரகாரம் சொத்துக்கள் மற்றும் நன்கொடைகள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பதவியணியினர் | - | பதவியணியின் வெற்றிடங்களை நிரப்பாமை மற்றும் பதவியணியினரின் குறைபாடுகள் காரணமாக செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தினை அடையமுடியாமை. |

ஒப்பம்: எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

11

ජාතික වැඩිහිටි මහලේකම් කාර්යාලය
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
National Secretariat for Elders
සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூகவலுவூட்டல் மற்றும்நலனோம்புகைஅமைச்சு
Ministry of Social Empowerment & Welfare

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | NSE/ADm/02/02General | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2016.05.30 |

செயலாளர் ஊடாக,
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்.

**முதியோர்களுக்கான தேசிய சபையின் 2015 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் கூற்றுத் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகள்.**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் தங்களினால் முன்வைக்கப்பட்ட எல்ஈடபிள்யு/சீ/என்சீஈ/1/15/06 மற்றும் 2016.05.24 ஆந் திகதிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை தொடர்பில் பின்வருமாறான புலனாய்வுகளைத் தயவுடன் முன்வைக்கின்றேன்.

02. **நிதிசார் கூற்று**

2.2.2. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 20 இன் பிரகாரம், அரச மானியங்களைக் கணக்கு வைக்கும் போது, காலக்கழிவு இற்றை வரையில் நிதிசார் கூற்றுக்களில் கணிப்பிடுதல் இடம்பெறவில்லை. 2016 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கினூடாக 2016 ஆம் ஆண்டு காட்டப்பட்ட மொத்தக் காலக்கழிவினை இணக்கஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

ලිපිනය : 2 වන මහල, D කොටස, සෙත්සිරිපාය - දෙවන අදියර, බත්තරමුල්ල.
முகவரி : 2ஆம் மாடி,தொகுதி D, செத்சிறிபாய - கட்டம் II, பத்திரமுல்லை
Address : 2nd Floor,Block D, Sethsiripaya - II Stage, Baththaramulla.
ඊ-මේල් / ஈ-மெயில் / E-mail : nsemss@gmail.com
දුරකතන / தொலைபேசி/ Telephone:
අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director : 2187045
කාර්යාලය /அலுவலகம் / Office : 3094543

2.2.2. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) நன்கொடைக் கணக்குக்கான ரூபா. 1,300,000.00 குறிப்பினை 2016 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கினூடாக சரியாக இணக்கஞ் செய்து முன்வைக்கின்றேன்.

(ஆ) 04 செலவுத் தலைப்புக்கள் தொடர்பில் கடந்த 2 வருடங்களினுள் செலவு அல்லாது மீளவும் கிடைக்கப் பெற்ற ரூபா. 396,598.00 கிடைப்பனவினை, 2016 ஆம் ஆண்டின், அதற்கு முந்தைய ஆண்டுகள் இலாப இணக்கக் கணக்கினூடாக இணக்கத்தினைச் செய்து இறுதிக் கணக்கினை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(இ) பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டுவதற்காக ரூபா. 288,264.00 செலவுக்கான கட்டுநிதி கிடைப்பனவினை, மூலதனக் கிடைப்பனவுகளிலிருந்து மீண்டுவரும் கிடைப்பனவுகளுக்கு மாற்றுவதற்கான குறிப்பினை 2016 ஆம் ஆண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஈ) 2003.08.22 ஆந் திகதிய கடிதத்தினூடாக கதிர்காமம் முதியோர் இல்லம் முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இற்றை வரையில் மதிப்பீட்டு அறிக்கை கதிர்காமம் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனை 2016 ஆம் ஆண்டின் கணக்குகளில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

4.1.**செயலாற்றல்**

(அ) **முதியோர் அமைப்புக்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்.**

I. முதியோர் அமைப்புக்கள் பிரதேச செயலகங்களினூடாக ஸ்தாபிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அவ் அமைப்புக்களை வலுவூட்டுவதற்காக நிதி உதவிகளை வழங்குதல் இடம்பெற்றுள்ளது. இவ் அமைப்புக்கள் தொடர்பில் பிரதேச செயலாளர், மாவட்டச் செயலாளர் மற்றும் மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் போன்ற உத்தியோகத்தர்களின் பரிந்துரைகளினூடாக கிடைக்கும் வேண்டுகோள்களுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 2015 ஆம் ஆண்டில் போதிய வேண்டுகோள்கள்

கிடைக்கப் பெறாததால் திட்டமிடப்பட்ட அளவுக்கு அவ்வுதவிகளை வழங்குவதற்கு இயலாமற் போயுள்ளது.

II. முதியோர் அமைப்புக்களுக்கு நிதியுதவிகளை வழங்கும்போது, அந்நிதியில் ரூபா. 3500/- கணக்கில் வைப்பிடப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துதல் முன்வைக்கப்படாத அமைப்புக்கள் தொடர்பில் விரைவில் உரிய உறுதிப்படுத்தலை முன்வைக்கும்படி பிரதேச செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் விரைவில் உரிய உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்து அது தொடர்பில் தங்களுக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஆ) <u>முதியோர் அடையாள அட்டைகளை வழங்குதல்.</u>

வருடாந்தம் பிரதேச செயலக மட்டங்களில் வழங்கப்பட்டு வரும் மொத்த அடையாள அட்டைகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை உறுதிப்படுத்துவதற்கு படிவமொன்றை அறிமுகஞ் செய்து அதன் பிரகாரம் தகவல்களை முன்வைக்கும்படி சகல பிரதேச செயலாளர்களும் விழப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். இது தொடர்பில் சரியான தரவுகளை இனிவருங்காலங்களில் தங்களுக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(இ) <u>சுயதொழில் தொடர்பில் நிதியுதவிகளை வழங்குதல்</u>

கணக்காய்வு இடம்பெற்றவேளையில் 05 பிரதேச செயலகங்கள் மாத்திரமே பின்னூட்டற் செயற்பாட்டினை நிறைவு செய்திருந்தது. 2015.12.31 ஆந் திகதியளவில் மேலும் 05 பிரதேச செயலகங்கள் பின்னூட்டற் செயற்பாட்டினை முன்னெடுத்து நிறைவு செய்துள்ளது.

சுயதொழில் பயனாளிகளுக்கு நிதியுதவிகளை வழங்குவதற்காக பிரதேச செயலாளர்களுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், காசோலைகள் கிடைத்தமையினை உறுதிப்படுத்துவதற்கு பற்றுச்சீட்டினை எமக்கு முன்வைக்காத பிரதேச செயலாளர்களுக்கு பற்றுச்சீட்டினை மிக விரைவில் அனுப்பும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பற்றுச்சீட்டுக்களை அலுவலகத்திற்குப் பெற்று தங்களுக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். மேலும் இனிவருங்காலங்களில் வழங்கப்படவுள்ள காசோலைகளுக்கு பற்றுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளுவது கட்டாயமான செயற்பாடாக முன்னெடுக்கப்படுதல் வேண்டும் என உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளது

(ஈ) **<u>விழிப்புணர்வூட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.</u>**

i. இனிவருங் காலங்களில் விழிப்புணர்வூட்டுதல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான முன்னேற்றத்தினை சரியானவாறு அறிக்கையிடும்படி பிரதேச செயலாளர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். 2016 ஆம் ஆண்டில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் சரியான தரவுகளை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

ii. விழிப்புணர்வூட்டும் பின்னூட்டற் செயற்பாடுகள் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(உ) **<u>முதியோர் இல்லங்களை மேற்பார்வை செய்தல்</u>**

இனிவருங்காலங்களில் முதியோர் இல்லங்களின் மேற்பார்வைச் செயற்படுகளை முறைசார் வகையில் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஊ) **<u>முதியோர் இல்லங்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்.</u>**

1. 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் தொடர்பில் பின்னூட்டற் செயற்பாடுகள் இற்றை வரையில் இடம்பெற்று வருவதாகத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.
2. கட்டிடங்களைப் புனருத்தாபனம் செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள உதவிகளிலிருந்து உரிய பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது எனவும் பின்னூட்டற் செயற்பாடுகள் இற்றை வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தயவுடன் அறியத் தருகின்றேன்.

(எ) **<u>அதிகாரச் சட்டத்தின் நோக்கங்கள் அமுற்படுத்தப்படாத சந்தர்ப்பங்கள்</u>**.

I. இலங்கையின் பாரம்பரிய ஒழுக்க விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட குடும்ப அலகினை வலுவூட்டுதல் தொடர்பிலான போதனைகள், கருத்தரங்குகள் மற்றும் வேலைத்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டிலிருந்து நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

II. முதியோர் சமுதாயம் தொடர்பிலான சரியான மற்றும் நாளதுவரைப்படுத்தப்பட்டுள்ள புள்ளி விபரங்களை முன்னெடுத்துச் செல்லுவதற்கு

கொழும்புப் பல்கலைக்கழகம் ஒன்றிணைந்த கணனித் தரவுகள் திட்டமொன்றை இற்றை வரையில் தயாரித்து வருகின்றது.

III. **RDTRI** (கிராமிய அபிவிருத்திப் பயிற்சி மற்றும் ஆய்வு நிறுவகம்) ஊடாக தற்போது முதியோர் சமுதாயம் தொடர்பிலான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், சகல முதியோர்கள் தொடர்பிலும் பொருத்தமான காப்புறுதித் திட்டமொன்றை அமைப்பது தொடர்பில் தேவையான தரவுகளை ஒன்றுதிரட்டுவதற்கு ஆய்வொன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

IV. இவ் இரண்டு ஆய்வுகளின் நிறைவில் தேடிக்கொண்ட தகவல்களின் **(Research Findings)** அடிப்படையில் இடம்பெற்று வரும் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களை விழிப்புணர்வூட்டுவதற்கு இனிவருங்காலங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

V. (vi), (vii), (ix), (x) – போன்ற விடயங்களுக்கான சகல செயற்பாடுகளும் மேலே இடம்பெற்றுவரும் ஆய்வுகளினூடாக பெற்றுக் கொள்ளப்படும் விடையின் கீழ் இடம்பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

4.2. **<u>பதவியணியினர் நிர்வாகம்</u>**

(அ) 2016 ஆம் ஆண்டளவில் அதிகாரச் சட்டத்தில் நிறைவேற்றப்படாத நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. இற்றை வரையில் அதிகாரச் சட்டத்திற்கு அமைய பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டு வருவதைக் குறிப்பிடுகின்றேன்.

1. முதியோர்களின் நலன்புரி தொடர்பில் பிரதேச செயலகங்களினூடாக கிராம உத்தியோகத்தர் தொகுதி மட்டங்களில் கிராமிய அமைப்புக்கள், பிரதேச மட்ட முதியோர் அமைப்புக்கள், மாவட்ட மட்ட முதியோர் அமைப்புக்கள் மற்றும் மாகாண மட்ட முதியோர் அமைப்புக்களை நிறுவுதல் இடம்பெற்றுள்ளது.

2. முதியோர்களின் உளத்தரத்தினை மேம்படுத்துவதற்கு முதியோர் பகல்நேர நிலையங்களை ஸ்தாபித்தல்

3. முதியோர்களின் பொருளாதாரத் தரத்தினை மேம்படுத்துவதற்கு சுயதொழில் உதவிகளை வழங்குதல்.

4. குறைந்த வருமானப் பயனாளியான முதியோர்களுக்கு ரூபா 2000/- கொடுப்பனவினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்துதல்.

5. ஒருவருமற்ற முதியோர்கள் தொடர்பில் முதியோர் இல்லங்களை மாவட்ட மட்டங்களில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஆ) நிறுவனத்திற்கு 100 முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உதவியாளர்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அதில் தற்போது 84 பேர் மாத்திரம் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனர். 9 உத்தியோகத்தர்கள் மாத்திரம் பிரதான அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டு சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ளனர். இப்பதவி ஓய்வூதியப் பயனற்ற ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் பங்களிப்பு வழங்கப்படுகின்ற பதவியொன்றாததால் ஓய்வூதியத்துடன்கூடிய பதவிகளைப் பெற்றுக்கொள்ளுவதன் கீழ் அடிக்கடி உத்தியோகத்தர்கள் இச்சேவையிலிருந்து விலகிச் செல்லுதல் இடம்பெறுகின்றது. இதன் காரணமாக எப்பொழுதும் வெற்றிடங்கள் நிலவுகின்றது. உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக சகல மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு உத்தியோகத்தர்களை இணைப்புச் செய்வதற்கு சாத்தியமில்லாமலுள்ளது. ஆதலால் இற்றை வரையில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு 331 பிரதேச செயலகங்களுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பதவிகளை அங்கீகரிப்புச் செய்துகொள்ளுவதற்கு கடிதம் முன்வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

(இ) உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி பதிற் கடமை பதவியொன்றாததால் இப்பதவிக்கு உத்தியோகத்தர்களை முன்வைப்பதற்கு விருப்பமின்மையினை வெளிப்படுத்துவதால் அது வெற்றிடமாகவே உள்ளது.

இவ் அலுவலகத்திற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றிருப்பது, சட்ட உத்தியோகத்தர் பதவி அன்று, சட்ட உதவியாளர் பதவியாகும். சட்ட உதவியாளர் என்பது, அரச சேவையின் MN 4 பட்டதாரிச் சம்பளத் திட்டத்திற்கு ஒத்ததாக இந்நிறுவனத்தில் அமுற்படுத்தப்படும் MA3 சம்பளத் திட்டத்தின் பதவியொன்றாகும். அதன் பிரகாரம் சட்டப் பட்டச் சான்றிதழுடன் பல உத்தியோகத்தர்கள் பிரத்தியேக அல்லது அரச சேவையின் ஏனைய வரப்பிரசாதங்களைக் கொண்ட உயர்

பதவிகளுக்கு நியமனங்களைப் பெற்றுச் செல்லுவதால் இப்பதவி தொடர்பில் உத்தியோகத்தர் ஒருவரினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு சிக்கல் காணப்படுகின்றது என்பதைக் குறிப்பிடுகின்றேன்.

4.3. **<u>செயற்பாட்டு செயற்திறனின்மை</u>**

(அ) இவ் வைப்பிலுள்ள நிதியூடாக முதியோர் புற்றுநோயாளர்களுக்கு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பில் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் பிரகாரம் நிலையான வைப்பு முதிர்வடையும் தினத்தன்று உரிய வட்டியினை அது தொடர்பில் பயன்படுத்தப்பவதாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட மீதிகள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டில் சகல இணக்கங்களையும் செய்து சரியான மீதிகளை முன் கொண்டு சென்று அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக அறிவித்துக் கொள்கின்றேன்.

4.4. **<u>முறைசார் வகையில் ஒப்படைக்கப்படாத காணிகள் மற்றும் கட்டிடங்களில் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.</u>**

கதிர்காமம் முதியோர் இல்லம் மற்றும் வழிகாட்டல் நிலையம் 2003 ஆம் ஆண்டில் முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், 2015 ஆம் ஆண்டு வரும்வரை சுவீகரித்துக் கொள்ளும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். எனினும் 2015.07.28 ஆந் திகதி நி.பி. 53 இன் ஊடாக சுவீகரிக்கும் செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், 2016.04.07 ஆந் திகதியளவில் உரிய மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதி 33,713,000.00 எனப் பிரதான மதிப்பீட்டாளர் இற்றை வரையில் அறிவித்துள்ளார். அதன் பிரகாரம் காணியினைச் சுவீகரித்துக் கொள்ளும் செயற்பாட்டின் பிரகாரம் இனிவருங்காலங்களில் அளவையாளர் நாயகத்தினால் குறிப்பிட்டவாறு அளவைச் செயற்பாடுகளை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுவீகரிப்புச் செயற்பாட்டின் நிறைவில் உறுதியுடன் சுவீகரித்துக் கொள்ளுவதற்கு இயலும். காணிச் சட்டத்தின் பிரகாரம் அரச காணிகளைச் சுவீகரித்துக் கொள்ளும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதே போல கதிர்காமம் முதியோர் இல்லத்தில் முதியோர்கள் தங்கயிருந்ததால் 2003 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் திணைக்களம் அக்காணி மற்றும் கட்டிடத்தினை முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு ஒப்படைத்துள்ளதால் 2004 ஆம் ஆண்டிலிருந்து பழுதுபார்த்தல் மற்றும நிர்மாணித்தல் தொடர்பில் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

4.5. இவ் அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் பணிக்கொடைக் கொடுப்பனவுக்கு, வருடாந்தம் பணிக்கொடை ஒதுக்கக் கணக்கினூடாக ஒதுக்கப்பட்டிருந்தாலும், அது தொடர்பில் முதலீடு இடம்பெறவில்லை. இது தொடர்பில் செய்யப்பட வேண்டிய செயற்பாடு தொடர்பில் நிதி அமைச்சுடன் தற்போது கலந்துரையாடப்பட்டு வருவதுடன் நிதி அமைச்சினூடாக வழங்கப்படும் ஆலோசனைகளுக்கமைய இனிவருங்காலங்களில் செயற்படுவதாகத் தங்களுக்கு அறிக்கையிடுகின்றேன்.

**ஒப்பம்/எஸ்.சுவிந்த எஸ். சிங்கப்புலி,**

பணிப்பாளர்.